**தஞ்சாவூர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்(மு.கூ.பொ) அவர்களின் செயல் முறைகள்**
**முன்னிலை: திருமதி.சி.மாலதி பி.இ.,**
**சுருக்கம்**

பணிக்குழு – தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 வரையிலான காலத்திற்கு - இளநிலை உதவியாளர் . பதவிக்குத் தேர்வு செய்யப்பட்டது – திரு.கா.முகமது இலியாஸ், இளநிலை உதவியாளர் - தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம் புதுக்கோட்டை – 12.03.2019 முற்பகல் முதல் பணிவரண்முறை செய்து – ஆணைகள் வழங்குதல் – தொடர்பாக.

---

ஆ / 351 / 2022 நாள்: 25.02.2022

<u>படிக்கவும் :</u>

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதம் எண்.1734/PSD-F/2019, நாள்: 20.02.2019
2. சென்னை-6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயலாணைகள் எண். ஜி3/44771/2018-2, நாள்:01.03.2019
3. சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயலாணைகள் எண்.ஓ1/4716/2019, நாள்:05.03.2019
4. புதுக்கோட்டை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அவர்களின் கடித எண்.அ/608/2021, நாள்:23.02.2022

---------

ஆணை:

மேலே 1-ல் படிக்கப்பட்டவாறு இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு இத்துறையில் பணியமர்வு செய்யப்பட்ட புதுக்கோட்டை, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.கா.முகமது இலியாஸ் அவர்கள் தமது பணியில் சேர்ந்த நாளான 12.03.2019 முற்பகல் முதல் கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group IV Services/ 2015-2016, 2016-2017 and 2017-2018 recruitment'.

24/4/22

துணை இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்
புதுக்கோட்டை.

Scanned with CamScanner

இவர் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 28(1)-ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32-ன் படியும் அன்னார் பணியில் சேர்ந்த நாளான 12.03.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

மேலும் தனியர் அரசாணை எண். 130 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை நாள் : 22.07.2008-ல் தெரிவிக்கப்பட்டவாறு பணிநியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள், தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்வு பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் அன்னார் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் தனியரது பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது என சான்றளிக்கப்படுகிறது.

25.02.22

இணை இயக்குநர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
தஞ்சாவூர்(மு.கூ.பொ)

பெறுநர்:
கா.முகமது இலியாஸ்,
இளநிலை உதவியாளர்,
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் அலுவலகம்,
புதுக்கோட்டை.

25/02/22

<u>நகல் பணிந்தனுப்பப்படுகிறது.</u>
1. இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை.
2. கூடுதல் இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருச்சிராப்பள்ளி.

<u>நகல்</u>
துணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், புதுக்கோட்டை.
(பணிப்பதிவேடு மற்றும் பதிவுருதாள் கிடைக்கப்பெற்றமைக்கு ஒப்புதல் அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறது.)

Scanned with CamScanner